தமிழ்
விடுமுறைக்கால செயலட்டை
தரம் - 03

உள்ளடக்கம்

- அறிவித்தல்
- அறிவுறுத்தல்
- கட்டளை

கே / தெஹி / சபுமல்கந்த த.ம.வி

ஆசிரியர் த.தர்ஷிகா

(DIP IN TEACHING PRIMARY EDUCATION)

www.lkedu.lk

❖ சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத் தருவன **அறிவித்தல்** ஆகும்.

நூலகத்துடன் தொடர்புடைய அறிவித்தல்கள்

அறிவித்தல் 1

நூலகத்தில் அமைதியைப் பேணவும்.

அறிவித்தல் 2

நூலகத்திற்கு வரும்போது அங்கத்துவ அட்டையைக் கொண்டுவரவும்.

www.lkedu.lk

அறிவித்தல் 3

நூலகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

அறிவித்தல் 4

ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெறும்.

அறிவித்தல் 5

பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும்.

அறிவித்தல் 6

புத்தகங்களை அனுமதியின்றி வெளியே எடுத்துச் செல்லாதீர்கள்.

www.lkedu.lk

❖ ஒருவர் பின்பற்றி நடப்பதற்கு உதவும் வகையில் அறிவுரை கூறுதல் **அறிவுறுத்தல்** ஆகும்.

நூலகத்துடன் தொடர்புடைய அறிவுறுத்தல்கள்

அறிவுறுத்தல் 1

நூலகத்திற்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது.

அறிவுறுத்தல் 2

நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களை சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.

www.ikeau.lk

அறிவுறுத்தல் 3

நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களை சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.

அறிவுறுத்தல் 4

நூலகத்தில் உள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அறிவுறுத்தல் 5

சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.

www.ikeu.lk

அறிவுறுத்தல் 6

நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்து முடித்ததும் உரிய இடங்களில் வைத்துவிட்டுச் செல்லவும்.

www.lkedu.lk

❖ ஒருவர் தவறாது செய்யவேண்டிய விடயம் பற்றி இன்னொருவரால் கூறப்படுவது **கட்டளை** ஆகும்.

❖ **நூலகத்துடன் தொடர்புடைய கட்டளைகள்.**

1. வாசித்த புத்தகங்களை வலது புறத்திலுள்ள இறாக்கையில் வையுங்கள்.

2. சிறுவர் நூல்களைப் பார்வையிட இரண்டாம் மாடிக்குச் செல்லுங்கள்.

www.lkedu.lk

3. புத்தகங்களைத் தெரிவுசெய்த பின்னர் புத்தக அலுமாரியை மூடிவிடுங்கள்.

4. அலுமாரியின் கீழ்த்தட்டில் உள்ள புத்தகங்களை எடுக்காதீர்கள்.

5. நூலகத்தினுள் உரத்துப் பேசாதீர்கள். அமைதியாக இருந்து வாசியுங்கள்.

www.lkedu.lk

- **பின்வரும் வாக்கியங்களில் இடைவெளிக்கு வரவேண்டிய சொற்களை தெரிந்து எழுதுவோம்.**

1) நூலகத்திற்குள்..... பயன்படுத்தக்கூடாது.

2) நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் ..... அறவிடப்படும்.

3) நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களைச் ..... தண்டப்பணம் அறவிடப்படும்.

www.ikedu.lk

4) நூலகத்தில் உள்ள புத்தகங்களை ..... எடுப்பது தண்டனைக்கு உரிய குற்றமாகும்.

5) சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் ..... தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.

6) நூலகத்திற்கு வரும்போது .....கொண்டு வரவும்.

7) ..... தினங்களில் நூலகம் மூடப்படும்.

www.lkedu.lk